RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-5 இதழ்- 24 ஜனவரி.31 2026 சனிக்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

# எங்களைப் பற்றிய குற்றச்சாட்டுகள் எல்லாமே பழைய ஸ்கிரிப்ட்

சென்னை: ஜன.31–

“நீட் தேர்வு விலக்குப் பற்றி அக்கறையுடன் கேட்டிருக்கக்கூடிய எதிர்க்கட்சியினர், அவர்களின் கூட்டணிக்கு தலைமை தாங்கும் பாஜகவிடம் அதை வலியுறுத்த ஏன் தயங்குகிறார்கள்? அஞ்சி நடுங்குகிறார்கள்?. அதனால்தான், நடைபெற இருக்கின்ற தேர்தல், தமிழ்நாடு வெர்சஸ் என்டிஏ என்று அழுத்தம் திருத்தமாக நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன்” என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை கிண்டியில் நடைபெற்ற கருத்தரங்கில் முதல்வர் ஸ்டாலின் கலந்து கொண்டு உரையாற்றினார். அப்போது அவர் பேசும்போது, தமிழ்நாடும் தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளும் தேர்தல் களத்திற்கு மும்முரமாக தயாராகிக் கொண்டிருக்கக்கூடிய நிலையில், “இந்தியாவிலேயே யாரும் அடைய முடியாத 11.19 சதவிகிதம் பொருளாதார வளர்ச்சியை, திராவிட மாடல் ஆட்சியில் சாத்தியப்படுத்தியிருக்கிறோம். இந்த வளர்ச்சியை நாங்கள் சாதாரணமாக அடைந்துவிடவில்லை. சமூகத்தில் எந்தவொரு பிரிவும் விடுபட்டுவிடக் கூடாது என்று, மிகவும் கவனமாக பார்த்துப் பார்த்து திட்டங்களை உருவாக்கியிருக்கிறோம்.

ஒருபக்கம், ஒன்றிய பாஜக அரசு தொடர்ந்து ஏற்படுத்தி வரும் அரசியல் நெருக்கடிகள் எல்லாவற்றையும் எதிர்கொண்டு, மறுபக்கம் தொலைநோக்குப் பார்வையுடன் எதிர்காலத்திற்துக்கான திட்டங்களை உருவாக்கி செயல்படுத்திக் கொண்டு வருகிறோம். தேவைகளுக்கு ஏற்ப, எங்களின் கொள்கைகளும் “ணிஸ்ஷீநீஸ்மீ” ஆகி வருகிறது.

இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாறு தமிழ்நாட்டிலிருந்து தான் எழுதப்பட வேண்டும்! அதேபோல், வளர்ச்சியும், தெற்கில் தமிழ்நாட்டில் தொடங்கி தான் எழுதப்பட வேண்டும். இந்த க்ரோத் ஹிஸ்டரியை தாங்கிக்கொள்ள முடியாதவர்கள், வாட்ஸ்அப் யூனிவர்சிட்டியில் பொய்களை எல்லாம் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். எங்களைப் பற்றி அவர்கள் சொல்லும் குற்றச்சாட்டுகள் எல்லாமே பழைய ஸ்கிரிப்ட்தான்.

அதில் முதல் குற்றச்சாட்டு, அரசியல் வாரிசு. இதற்கு நான் ஏற்கெனவே பதில் சொல்லிவிட்டேன். யார் வேண்டுமானாலும் அரசியலுக்கு வரலாம். ஆனால், யார் வந்தாலும், அவர்கள் மக்களுக்கு முன்னால் நின்று,



அவர்கள் நம்பிக்கையைப் பெற்று ஓட்டு பெற்றால் மட்டும்தான், வெற்றி பெற முடியும். எனவே இது, எங்களை களத்தில் எதிர்க்க முடியாதவர்கள் வைக்கும் இற்றுப்போன குற்றச்சாட்டு. அடுத்து சொல்வது என்ன? ஊழல். இதுவரைக்கும் எங்கள் மீது வைத்த குற்றச்சாட்டுகளை யாராவது ஆதாரத்துடன் நிரூபித்திருக்கிறார்களா? கற்பனையான குற்றச்சாட்டுகளை சொல்லி, எங்கள் மீது பழி சுமத்திக் கொண்டே இருக்கிறார்கள்.

நான் பாஜகவிடம் கேட்பது என்னவென்றால், உங்கள் கூட இருக்கும் எல்லோருமே ஊழல்வாதிகள்தான். அதிலும், உச்ச நீதிமன்றம் வரைக்கும் சென்று ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்டவர்கள்தான் அதிமுக. நீங்கள் கூட்டணியில் இல்லாத சமயத்தில், அவர்கள் மீது எத்தனை குற்றச்சாட்டுகளை சொன்னீர்கள். இப்போது உங்கள் வாஷிங் மெஷினில் அவர்கள் எல்லாம் வெளுத்துவிட்டீர்களா? இதுதான் என்னுடைய கேள்வி.

அடுத்து, இந்து விரோத கட்சி என்று பேசுவார்கள். ஆனால், உண்மை என்ன? இந்தியாவிலேயே, பா.ஜ.க. ஆளுகின்ற மாநிலங்களில் கூட இல்லாத அளவிற்கு, நாங்கள் ஆட்சி அமைத்து இந்த ஆயிரத்து 730 நாட்களில், நான்கா யிரம் கோயில்களுக்கு குடமுழுக்கு செய்திருக்கிறோம். உண்மையான பக்தர்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள்.

இப்படி, பாஜக வைத்த குற்றச்சாட்டுகளுக்கு எல்லாம் நான் ஆதாரத்தோடு பதில் சொல்லிவிட்டேன். ஆனால், அவர்களோ, நாங்கள் கேட்கின்ற எந்த கேள்விகளுக்கும் பதில் சொல்லவில்லை!

இப்போது உங்கள் முன்பாகவும் கேட்கிறேன். இந்தி திணிப்பை ஏற்காததால் கொடுக்காமல் இருக்கும் கல்வி நிதி எப்போது வரும்?

பாஜக ஆளும் மாநிலங்களுக்கு வாரி வழங்கிவிட்டு, இயற்கைப் பேரிடர்களுக்காக நாங்கள் கேட்ட நிவாரணத் தொகை கூட முறையாக தரவில்லையே ஏன்?

கோவை மற்றும் மதுரை மெட்ரோ திட்டங்களுக்கு எப்போது அனுமதி வரும்? கீழடி அறிக்கை எப்போது வெளியே வரும்? இப்படி ஏராளமான கேள்விகள் இருக்கிறது. இது எதற்குமே அவர்களிடம் இருந்து பதில் வராது. ஏனென்றால், இது எல்லாமே, பாஜக தமிழ்நாட்டிற்கு செய்திருக்கக்கூடிய துரோக லிஸ்ட்.

அவர்கள் ஒவ்வொரு முறை இங்கு வரும்போது, அந்த லிஸ்ட் பெரிதாகிக் கொண்டே செல்கிறது. நாங்கள் எதற்காக இவ்வளவையும் பேசுகிறோம் என்றால், நம்முடைய இந்திய நாடு ஒற்றுமையாக, வலிமையாக இருக்க வேண்டும் என்றுதான் இவ்வளவையும் சொல்கிறோம்.

நாங்கள் நாட்டின் யூனிட்டிக்காகப் பேசுகிறோம். பாஜகவோ யூனிஃபார்மிட்டி பேசி, பாசிச அரசியல் செய்கிறது. மாநிலங்கள்தான், நாட்டின் அடித்தளம். இந்தியா என்பது, “யூனியன் ஆஃப் ஸ்டேட்ஸ்”. இதை பாஜக உணர்ந்து செயல்பட வேண்டும் என்றுதான் ஒன்றிய அரசு என்று நினைவுப்படுத்திக் கொண்டே இருக்கிறோம்.

அரசியலமைப்புச் சட்டத்தையும், இந்த நாட்டில் வாழும் மக்களையும் காப்பாற்றுவதுதான் உண்மையான நாட்டுப்பற்று என்று நாங்கள் அழுத்தமாக சொல்கிறோம். என்டிஏ என்கிற பெயரில், தமிழ்நாட்டில் பாஜக உருவாக்கியிருக்கும் கூட்டணிக்கு என்று எந்தக் கொள்கையும் கிடையாது அது, முழுக்க முழுக்க கட்டாயத்தினாலும், ஒரு சிலரின் சுயநலத்திற்காகவும் கூடியுள்ள துரோகக் கூட்டணி அது.

நீட் தேர்வு விலக்குப் பற்றி அக்கறையுடன் கேட்டிருக்கக்கூடிய எதிர்க்கட்சியினர், அவர்களின் கூட்டணிக்கு தலைமை தாங்கும் பாஜகவிடம் அதை வலியுறுத்த ஏன் தயங்குகிறார்கள்? அஞ்சி நடுங்குகிறார்கள்?

தமிழ்நாட்டு மீது பாஜக வலுக்கட்டாயமாக திணித்திருக்கும் திட்டங்கள் பற்றி குரல் எழுப்ப திராணி யில்லாமல் இருப்பவர்கள், நெஞ்சை நிமிர்த்தி எப்படி மக்களுக்காக கேள்வி எழுப்புவார்கள்? தமிழ்நாட்டின் தன்மானத்தைக் காப்பதற்கு எப்படி தலைநிமிர்ந்து பேசுவார்கள்? அதனால்தான், நடைபெற இருக்கின்ற தேர்தல் தமிழ்நாடு வெர்சஸ் என்டிஏ என்று அழுத்தம் திருத்தமாக நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன்!

வழக்குகளால் மிரட்டப்பட்டு, முழுக்க முழுக்க சுயநலத்தோடு அமைக்கப்பட்டிருக்கக்கூடிய என்டிஏ கூட்டணியை, அடுத்தடுத்த துரோகங்களுக்கான அச்சாரமாக தான் தமிழ்நாட்டு மக்கள் பார்க்கிறார்கள். என்டிஏவுக்கு தோல்வி எனும் தக்க பதிலடியை வரக்கூடிய தேர்தலில் தமிழ்நாடு நிச்சயம் வழங்கும். திராவிட மாடல் 2.0 அரசு அமைய நிச்சயம் பாடுபடுவேன்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




## விவசாயிகளுக்கு டயமண்ட் பிளாக் மொத் கட்டுப்பாடு குறித்த பெரோமோன் வலை செயல்விளக்கம்

ஆண்டிபட்டி, ஜன.31-

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவிகள், ஆண்டிப்பட்டி வட்டாரத்தில் உள்ள ஜி. சுப்புலாபுரம் கிராமத்தில் காய்கறி பயிர்களில் அதிக சேதம் விளைவிக்கும் டயமண்ட் பிளாக் மொத் கட்டுப்பாடு குறித்த பெரோமோன் வலை செயல்விளக்கத்தை விவசாயிகளுக்கு வழங்கினர்.

இந்த நிகழ்ச்சியில் பெரோமோன் வலையின் பயன்பாடு மற்றும் செயல்பாடு குறித்து விளக்கப்பட்டது.

செயல்விளக்கத்தின் போது கி. திவ்யதர்ஷினி பெரோமோன் வலை மூலம் பூச்சி தாக்குதலை ஆரம்ப நிலையிலேயே கண்டறியும் முறையை எடுத்துரைத்தார்.

இதன் மூலம் தேவையற்ற ரசாயன பூச்சிக்கொல்லி பயன்பாட்டை குறைக்கலாம் என தெரிவிக்கப்பட்டது.

இந்த முறை சுற்றுச்சூழலுக்கு பாதுகாப்பானதும் செலவுக் குறைந்ததும் ஆகும்.

ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மைக்கு இது முக்கிய பங்கு வகிக்கும் என கூறப்பட்டது.

செயல்விளக்கத்தில் பங்கேற்ற விவசாயிகள் இது மிகவும் பயனுள்ளதாகவும் அறிவுப்பூர்வமாகவும் இருந்ததாக தெரிவித்தனர்.

## கிருஷ்ணகிரியில் மதியழகன் எம்எல்ஏ முன்னிலையில் அதிமுக, தவெக கட்சியினர் திமுகவில் இணைந்தனர்

கிருஷ்ணகிரி, ஜன.31

கிருஷ்ணகிரியில் அதிமுக மற்றும் தவெக உள்ளிட்ட மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்டோர், கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் மதியழகன் எம்எல்ஏ முன்னிலையில் தங்களை திமுகவில் இணைத்துக் கொண்டனர்.

கிருஷ்ணகிரி நகரின் 11வது வார்டு பூந்தோட்டம் பகுதி மற்றும் 13வது வார்டு ரயில்வே காலனி பகுதிகளைச் சேர்ந்த அதிமுக, தவெக உள்ளிட்ட கட்சிகளைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்டோர், தங்கள் கட்சிகளில் இருந்து



விலகி, நேற்று திமுகவில் இணைந்தனர். புதிதாக இணைந்தவர்களுக்கு மதியழகன் எம்எல்ஏ கட்சி துண்டு அணிவித்து வரவேற்றார்.

அப்போது அவர் பேசுகையில்,

“திமுக அரசு செயல்படுத்தி வரும் மக்கள் நலத்திட்டங்கள் மற்றும் சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துச் சொல்லி, கட்சிக்காக உறுதியாக பணியாற்ற வேண்டும். வருகிற சட்டமன்றத் தேர்தலில் திமுக தலைமையிலான கூட்டணி வெற்றி பெற அனைவரும் பாடுபட வேண்டும். கட்சிக்காக உழைப்பவர்களுக்கு பதவிகள் தானாகவே தேடி வரும்,” என்றார்.

இந்த நிகழ்ச்சியில், மாவட்ட திமுக அவைத் தலைவர் தட்ரஅள்ளி நாகராஜ், மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி, நகர பொறுப்பாளர்கள் அஸ்லம், வேலுமணி உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் மற்றும் கட்சியினர் பலர் கலந்து கொண்டனர்.




## தொடக்கப்பள்ளி சத்துணவு பொறுப்பாளர் பணிநிறைவு விழா நடைபெற்றது

சிவகங்கை ஜன.31

சிவகங்கை வட்டம் அரசனி முத்துப்பட்டி அருகாமையில் உள்ள பட்டியலினத்தவர் அதிகம் வசிக்கும் கிராமமான நைனாங்குளம் கிராமமாகும் 80 களின் தொடக்கத்தில் உருவான இந்த பள்ளியில் தொடர்ந்து 32 ஆண்டுகளுக்கும் மேலாக சத்துணவுப் பொறுப்பாளராக பணிபுரிந்து வருபவர் செல்வராணி ஆவார்...

நேற்றுடன் தனது பணிக்காலத்தை முடித்துக் கொண்டு பணி ஓய்வு பெறுவதையொட்டி பள்ளி வளாகத்தில் பிரிவுஉபசார விழா நடைபெற்றது. பள்ளி தலைமையாசிரியை இந்திரா தலைமையேற்க, பள்ளி ஆசிரியை பாக்யலெட்சுமி வரவேற்புரையாற்றினார்...

ஊர் முக்கியஸ்தர்களான எல் ஐ சி பணிநிறைவு ஊழியர் சிதம்பரம், அடைக்கமுத்து, தன்னார்வலர் நாச்சி ஆத்தா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியின் இறுதியில் பொறுப்பாளர் செல்வமணி ஏற்புரையாற்றி கிராமத்தினர் மற்றும் பள்ளி ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் கண்ணீர் மல்க நன்றி தெரிவித்துக் கொண்டார்...

இந்த நிகழ்ச்சியின் போது, பெற்றோர்களான தவமணி, மல்லிகா, விஜயலெட்சுமி, லதா, தீபா, நதியா, சங்கீதா, செல்வி, திவ்யா உள்ளிட்ட பள்ளிக்குழந்தைகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



■ செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகரம் 4வது மண்டலம் 49வது வட்டத்தில் உள்ள முத்துரங்க பூங்காவில் புதியதாக இறகு பந்து விளையாட்டு மைதானம் மற்றும் சிறுவர்கள் விளையாட்டு பூங்கா ஆகியவற்றை தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அவர்கள் பொது மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார் இந்நிகழ்வில் தாம்பரம் மாநகர மேயர் க.வசந்தகுமாரி, 4வது மண்டல குழுத்தலைவர் பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளர் டி.காமராஜ், 5வதுமண்டல குழுத்தலைவர் தாம்பரம் மேற்கு பகுதி செயலாளர், எஸ்.இந்திரன் ஆகியோருடன் அணிகளின் நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பொதுமக்களும் பெரும் திரளாக பங்கேற்றனர்






■ வேலூர் மாவட்டத்தில் முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழா இது நம்ம ஆட்டம் 2026" விளையாட்டுப் போட்டிகளின் ஒருபகுதியாக மாவட்ட அளவிலான போட்டிகளை மாவட்ட ஆட்சியர் வே.இரா. சுப்புலெட்சுமி. பாகாயம் கிறிஸ்துவ மருத்துவ கல்லூரி விளையாட்டு மைதானத்தில் தொடங்கி வைத்து, சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் வேலூர் சட்டமன்ற உறுப்பினர் ப.கார்த்திகேயன். மாமன்ற உறுப்பினர்கள் ஆண்டாள் விநாயகம், வி.எஸ்.முருகன், மாவட்ட விளையாட்டு அலுவலர் சுப்பிரமணியன், மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் சரஸ்வதி உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ தேனிமாவட்டம் கம்பம் மணிகட்டி ஆலமரம் அருகே வினித் என்பவருக்கு சொந்தமான ஆடு ஒன்றை மர்ம விலங்கு கடித்ததில் ஆட்டின் எலும்பு மற்றும் தலை பகுதி தனித்தனியா கிடந்துள்ளது.ஆட்டின் உரிமையாளர் கம்பம் மேற்கு வனச்சரகத்தினருக்கு தகவல் கொடுத்துள்ளார் விரைந்துவந்த வனத்துறையினர் ஆட்டை தாக்கியது சிறுத்தையா இல்லை வேறேனும் விலங்கா எ விசாரணை நடத்தி வருகின்றனர்

# திருச்செங்கோடு வட்டார போக்குவரத்து அலுவலகம் சாலை பாதுகாப்பு விழா கொண்டாட்டம்




திருச்செங்கோடு, ஜன.31-

திருச்செங்கோடு மோட்டார் வாகன அதிகாரி ஆர்டிஓ கோ. மோகன பிரியா, மற்றும் ஆய்வாளர் உமா மகேஸ்வரி இவர்களது தலைமையில். சாலை பாதுகாப்பு விழா விமர்சையாக கொண்டாடப்பட்டது. சமூக ஆர்வலர்களும். மற்றும் ஓட்டுநர் பயிற்சி பள்ளி நடத்தும் அனைவரும் கலந்து கொண்டனர். மேலும் பொதுமக்கள் இரு சக்கர வாகனம் ஓட்டும்போது இளைஞர்கள் பெரியவர்கள் குழந்தைகள் மற்றும் பெண்கள் தங்களது உயிர்களையும் உங்களை நம்பி வாழும் குடும்பங்களையும் காத்துக் கொள்வதற்காக தலை கவசம் அணிய வேண்டும் என்பதை உணர்த்தும் வகையிலும். நான்கு சக்கரம் வாகனங்கள் ஓட்டுபவர்கள் கட்டாயமாக சீட் பெல்ட் அணிந்து ஓட்டுவதால் பெரிய விபத்தினை தடுத்து விடலாம் என மக்களுக்கு எடுத்துரைத்து. போக்குவரத்து காவல்துறை ஆய்வாளர் உமா மகேஸ்வரி அவர்கள் மக்கள் அனைவரும் உணரும்படி வாகனங்களில் சாலைகளில் ஊர்வலமாக சென்று மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் வரை சென்றடைந்தனர்.





# சேம்பார் நடுநிலைப்பள்ளியில் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி ஏற்பு

காளையார் கோவில் ஜன.31-

சிவகங்கை மாவட்டம், காளையார் கோவில் ஒன்றியம், சேம்பார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் தியாகிகள் தினத்தை முன்னிட்டு தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழியை அனைத்து மாணவர்களும் எடுத்துக் கொண்டனர். நாடு முழுவதும் ஜனவரி 30 ஆம் தேதி தேசத்தந்தை மகாத்மா காந்தி நினைவு தினமான இன்று தியாகிகள் தினம் கொண்டாடப்படுகிறது. சேம்பார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியர்(பொறுப்பு) சுரேஷ் தலைமையில், ஆசிரியர்களும், மாணவர்களும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். ஏழாம் வகுப்பு மாணவன் முகேஷ் உறுதிமொழி கூற மற்ற மாணவர்கள் தொடர்ந்து கூறி உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். முன்னதாக தியாகிகள் தினத்தை முன்னிட்டு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. தலைமையாசிரியர் சுரேஷ் தீண்டாமையைப் பற்றியும் மகாத்மா காந்தி நினைவு தினமான , தியாகிகள் தினம் பற்றியும் எடுத்துரைத்தார்.

தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழியான, இந்திய அரசியலமைப்பின்பால் இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/ குடிமகள் ஆகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்கமாட்டேன் என்று இதனால் உளமாற உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படை கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும் உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியலமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன் என்ற உறுதி மொழியை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் எடுத்துக் கொண்டனர்.

மக்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் தீண்டாமை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இத்தினத்தின் நோக்கமாகும் என தலைமையாசிரியர் தீண்டாமை ஒழிப்பு மற்றும் தியாகங்கள் தினத்தைப் பற்றி எடுத்துரைத்தார்..

ஆசிரியர்கள் காளீஸ்வரன், முத்துக்குமார், முருகன், சகாய செல்வி, பாரதி மலர், தனபாக்கியம் , சத்துணவு பணியாளர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.





# பரம்பை பாலாவுக்கு விதிக்கப்பட்ட ஆயுள் தண்டனை ரத்து: சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை அதிரடி தீர்ப்பு

மதுரை, ஜன.31-

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி தேவேந்திரர் பண்பாட்டு கழகத்தின் முன்னாள் தலைவரும், தமிழ்நாடு தேவேந்திரர் பண்பாட்டு கழகத்தின் தற்போதைய தலைவருமான பரம்பை பாலாவுக்கு வழங்கப்பட்ட ஆயுள் தண்டனையை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை ரத்து செய்து உத்தரவிட்டுள்ளது.

வழக்கின் பின்னணி: கடந்த சில காலத்திற்கு முன்பு ராமநாதபுரம் மாவட்ட நீதிமன்றம், கொலை வழக்கு ஒன்றில் பரம்பை பாலாவுக்கு ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. இந்த தீர்ப்பை எதிர்த்து, பரம்பை பாலா தரப்பில் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

நீதிமன்ற தீர்ப்பு: இந்த மேல்முறையீட்டு மனு இன்று விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள், கீழமை நீதிமன்றம் விதித்த தண்டனையை ரத்து செய்து அதிரடி உத்தரவு பிறப்பித்தனர். இந்த உத்தரவின் மூலம் பரம்பை பாலா மீதான ஆயுள் தண்டனை நீக்கப்பட்டு, அவர் விரைவில் விடுதலையாக உள்ளார்.

இந்த வழக்கில் பரம்பை பாலா தரப்பிற்காக மூத்த வழக்கறிஞர்கள் லஜபதி ராய் மற்றும் அழகுமணி ஆகியோர் ஆஜராகி வாதிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.






# சிவகங்கை நகர உருவான தினம்: அரண்மனையில் சிலம்பம் சுற்றி அசத்திய மானாமதுரை மாணவர்கள்

சிவகங்கை ஜன.31-

சிவகங்கை நகரம் உருவான தினத்தையொட்டி, சிவகங்கை அரண்மனையில் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளுடன் கூடிய சிறப்பு விழா உற்சாகமாக நடைபெற்றது.

சிலம்பாட்டத் திறமை: இந்த விழாவில் சிவகங்கை ராணி DKS மதுராந்தக நாச்சியார் முன்னிலையில் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் அரங்கேறின. குறிப்பாக, சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சீனி ஆசான் சிலம்பக் கூடத்தின் தலைமை பயிற்சியாளர் செல்வம் தலைமையில் திரளான மாணவமாணவிகள் கலந்து கொண்டனர். அவர்கள் வீரக்கலையான சிலம்பத்தை லாவகமாகச் சுற்றி, தங்களது அபார திறமையை வெளிப்படுத்தி அங்கிருந்தோரை வியப்பில் ஆழ்த்தினர்.

சிறப்பு விருந்தினர்கள்: இந்நிகழ்வில் சிவகங்கை தேவஸ்தான அலுவலர்கள், பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியைகள் எனப் பலர் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தனர். நகரத்தின் வரலாற்றுச் சிறப்பை விளக்கும் வகையில் அமைந்த இந்த விழா, உள்ளூர் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.

# செங்கல்பட்டு மதுரப்பாக்கம் முதல் நிலை ஊராட்சியில் உள்ள அனைத்து தெருகளுக்கும் பெயர் பலகை வைத்தனர்

செங்கல்பட்டு, ஜன.31-

செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையார் மலை ஒன்றியம் மதுரபாக்கம் முதல் நிலை ஊராட்சியில் உள்ள அனைத்து தெருகளுக்கும் பெயர் பலகை வைத்தனர் . இந்த நிகழ்வில் மதுரப்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர்., மு.வேல்முருகன் மதுரப்பாக்கம் அகரம் தென் திருவஞ்சேரி ,ஒட்டியம்பாக்கம் ,ஒன்றிய கவுன்சிலரமான. அமுதா வேல்முருகன் மேற்பார்வை யில கவனமாகவும் நேர்த்தியாகவும் பெயர் பலகை நடப்பட்டது.






■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் புதிய காவல் துணை கண்காணிப்பாளராக ராஜா நேற்று (ஜன30) அதிகாரப்பூர்வமாக பதவியேற்றார். இதற்கு முன்பு பார்த்திபன் இந்தப் பதவியில் பணியாற்றினார். பொதுமக்களின் பாதுகாப்பு, குற்றத் தடுப்பு மற்றும் போக்குவரத்து ஒழுங்கு ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்தப்படும் என ராஜா தெரிவித்தார். காவல் துறை அதிகாரிகள் அவருக்கு வாழ்த்து தெரிவித்தனர். மேலும் மாலை தந்தி நாளிதழ் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர்.



■ தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவிகள், ஆண்டிப்பட்டி வட்டாரத்தில் உள்ள T. சுப்புலாபுரம் கிராமத்தில் கம்பு பயிரில் VAM (வேர் இணை நுண்ணுயிர்) பயன்பாடு குறித்த செயல்விளக்கத்தை விவசாயிகளுக்கு நடத்தினர். இந்த நிகழ்ச்சியில் VAM நுண்ணுயிர்களின் முக்கியத்துவம் மற்றும் அதன் செயல்பாடுகள் குறித்து விளக்கப்பட்டது. செயல்விளக்கத்தின் போது திவ்யதர்ஷினி VAM பயன்பாட்டால் கம்பு பயிரின் வேர் வளர்ச்சி மேம்படும் விதத்தை எடுத்துரைத்தார். மேலும், மண்ணிலுள்ள ஊட்டச்சத்துகளை பயிர்கள் சிறப்பாக உறிஞ்ச உதவும் திறன் குறித்து விளக்கினார். VAM பயன்பாட்டால் மண் ஆரோக்கியம் மேம்படுவதாக தெரிவிக்கப்பட்டது. இத்தகைய உயிரியல் தொழில்நுட்பங்கள் நிலையான வேளாண்மைக்கு உதவும் என கூறப்பட்டது.நிகழ்ச்சியில் பங்கேற்ற விவசாயிகள் இந்த செயல்விளக்கத்தை பயனுள்ளதாகவும் அறிவுப்பூர்வமாகவும் பாராட்டினர்.



■ மதுரை சொக்கிகுளம் பகுதியில் என்பேன்ஸ் குழந்தைகள் மேம்பாட்டு மையம் துவக்க விழா நடைபெற்றது . விழாவில் நிதித்துறை அமைச்சர் தங்கம்தென்னரசு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் TN Chamber தலைவர் ஜெகதீசன், PSY கல்வி குழும நிர்வாக இயக்குநர் வரதராஜன், என்பேன்ஸ் மேம்பாட்டு மைய நிறுவனர் சரண்யாசண்முகராஜா, இயக்குநர் விக்னேஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர். இம்மையத்தில் பேச்சு சிகிச்சை தொழில் சிகிச்சை சிறப்பு கல்வி பிசியோதெரபி உளவியல் சேவைகள் நரம்பியல் வளர்ச்சி சிகிச்சை உணர்வு ஒருங்கிணைப்பு சிகிச்சை ABA சிகிச்சை உள்ளிட்ட சிறப்பு சேவைகள் குழந்தைகளுக்கு வழங்கப்பட உள்ளது.



# சிவகங்கையில் ஈகி முத்துக்குமார் நினைவேந்தல்: அம்பேத்கர் சிலை அருகே வீரவணக்கம்

சிவகங்கை ஜன.31-

சிவகங்கை மாவட்டம் ஈழத் தமிழர்களுக்காகத் தன்னைத் தானே ஈகம் செய்த கரும்புலி முத்துக்குமாரின் நினைவேந்தல் நாள் (ஜனவரி 29) சிவகங்கை நகரில் உணர்வுப்பூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

மரியாதை மற்றும் வீரவணக்கம் சிவகங்கை நகரில் அமைந்துள்ள புரட்சியாளர் அம்பேத்கர் சிலை அருகே நடைபெற்ற இந்த நிகழ்வில், முத்துக்குமாரின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து வீரவணக்கம் செலுத்தப்பட்டது. தமிழினத்திற்காக அவர் ஆற்றிய தியாகத்தை நினைவுகூர்ந்து பல்வேறு முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

பங்கேற்ற நிர்வாகிகள் இந்த நினைவேந்தல் நிகழ்ச்சியில் கட்சியின் முக்கிய நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்:

மாவட்டச் செயலாளர்கள்: மானாமதுரை சட்டமன்றத் தொகுதி மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் பாலையா, சிவகங்கை சட்டமன்றத் தொகுதி மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் பா.வெற்றிவிஜயன். மண்டல மற்றும் மாவட்ட நிர்வாகிகள்: மண்டலத் துணைச் செயலாளர் முத்து ராசு, மாவட்டச் செய்தி தொடர்பாளர் ஆதிவளவன், மாவட்ட அமைப்பாளர் சேட் முகமது. ஒன்றிய மற்றும் கிளை நிர்வாகிகள்: சிவகங்கை ஒன்றியச் செயலாளர் ராமதாஸ், சூரக்குளம் ஆனந்த், ஊடக மையத்தைச் சேர்ந்த அஜித் வளவன்.

மேலும் இவர்களுடன் ஆறுமுகம், தர்மர், மூக்கையா, பெரியசாமி உள்ளிட்ட ஏராளமான தோழர்கள் கலந்துகொண்டு தங்களது மரியாதையைச் செலுத்தினர்.

# புறவழிச்சாலையில் கொட்டப்படும் இறைச்சிக் கழிவுகள் அரசுக்கு பொதுமக்கள் மற்றும் ம.ம.க கோரிக்கை

இளையான்குடி ஜன. 31-

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி பேரூராட்சியில் உள்ள 18 வார்டுகளிலும் சேகரிக்கப்படும் குப்பைகள் மற்றும் கோழி இறைச்சிக் கழிவுகள், போதிய பராமரிப்பின்றி புறவழிச்சாலையில் கொட்டப்படுவதால் பொதுமக்களின் சுகாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.



சுகாதாரச் சீர்கேடும் பொதுமக்களின் பாதிப்பும் பேரூராட்சி நிர்வாகத்தின் சார்பில் சேகரிக்கப்படும் குப்பைகள், தற்போதுள்ள குப்பைக் கிடங்கு நிரம்பிவிட்ட காரணத்தால், அதன் நுழைவு வாயிலிலும் பொதுமக்கள் நடைப்பயிற்சி மேற்கொள்ளும் புறவழிச்சாலையிலும் கொட்டப்படுகின்றன.

* தீ வைப்பு: இவ்வாறு கொட்டப்படும் குப்பைகள் அவ்வப்போது தீ வைத்து எரிக்கப்படுவதால், அப்பகுதி முழுவதும் நச்சுப் புகை பரவுகிறது.

* உடல்நலப் பாதிப்பு: இதனால் நடைப்பயிற்சி மேற்கொள்பவர்களுக்கு மூச்சுத்திணறல் ஏற்படுவதுடன், வைரஸ் காய்ச்சல் உள்ளிட்ட தொற்று நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்தச் சுகாதாரச் சீர்கேட்டினால் சிலர் உயிரிழந்துள்ளதாகவும் அப்பகுதி மக்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

தொடர் புகார்கள் மற்றும் கோரிக்கைகள் இது தொடர்பாக மனிதநேய மக்கள் கட்சி சார்பில் பேரூராட்சி செயல் அலுவலர், மாவட்ட ஆட்சியர் மற்றும் பேரூராட்சிகளின் இணை இயக்குநர் ஆகியோரிடம் பலமுறை மனுக்கள் அளிக்கப்பட்டன. மேலும், தமிழ்நாடு முதலமைச்சரின் தனிப்பிரிவிற்கும் புகார்கள் அனுப்பப்பட்டுள்ளன.

முதலமைச்சருக்கு வலியுறுத்தல் சிறுபான்மையினர் அதிகம் வசிக்கும் இந்தப் பகுதியில், மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் உடனடியாக இதில் தலையிட வேண்டும் என மனிதநேய மக்கள் கட்சி வலியுறுத்தியுள்ளது.

"ஊருக்கு வெளியே உள்ள சுமார் 150 ஏக்கர் பரப்பளவு கொண்ட அரசு நிலத்தில் புதிய குப்பைக் கிடங்கை அமைத்து, நகரின் சுகாதாரத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்."

இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் அகமது ஜலால், நகரப் பொருளாளர் செய்யது இப்ராஹிம், நகரச் செயலாளர் அப்துல் காதர் அல்ஹாப், மற்றும் தமுமுக நகரச் செயலாளர் ஜாபர் ஜான் ஆகியோர் மீண்டும் புகார் மனு அளித்துள்ளனர்.



■ மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகையில் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி துணை மேயர் தி.நாகராஜன் தலைமையில் அனைத்து பணியாளர்களும் ஏற்றுக் கொண்டனர் அருகில் உதவி ஆணையாளர் (பணி) அருணாச்சலம் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் பணியாளர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.



■ மதுரை மாவட்டம், மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்தில் காவல்துறை மற்றும் போக்குவரத்துறை சார்பில் சாலை பாதுகாப்பு வாரவிழாவை முன்னிட்டு சாலை பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு கண்காட்சி அரங்கினை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., திறந்து வைத்து பார்வையிட்டார். மாநகர காவல் ஆணையாளர் லோகநாதன் இ.கா.ப., , மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பி.கே.அர்விந்த் இ.கா.ப., , மாநகர காவல் துணை ஆணையர்(போக்குவரத்து) எஸ்.வனிதா ஆகியோர் உடன் உள்ளனர்.



# காவேரிப்பட்டினம் பேரூராட்சி தலைவர் இல்ல திருமண விழா - அமைச்சர் காந்தி நேரில் வாழ்த்து

கிருஷ்ணகிரி, ஜன.31-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் பேரூராட்சி தலைவர் அம்சவேணி செந்தில்குமார் அவர்களின் இல்ல திருமண விழா கடந்த 2025ஆம் ஆண்டு நவம்பர் 27ஆம் தேதி நடைபெற்றது.

இந்த நிலையில், காவேரிப்பட்டினத்தில் உள்ள அவர்களது இல்லத்தில் நேற்று காலை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் காந்தி அவர்கள் நேரில் சந்தித்து, மணமக்கள் காமேஷ் ஸ்ரீ ப்ரீத்தி ஆகியோரை வாழ்த்தினார்.

இந்த நிகழ்வில், மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ், மாவட்ட ஓட்டுநர் அணி துணைத் தலைவர் செந்தில்குமார், ஒன்றிய செயலாளர்கள் தேங்காய் சுப்பிரமணி, மகேந்திரன், சரவணன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் டி.சி.ஆர். தினேஷ் ராஜன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சங்கர், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் மணி விஜயன், மாவட்ட சிறுபான்மை பிரிவு வலியுத்தீன், நகர இளைஞரணி தினேஷ், வார்டு கவுன்சிலர்கள் கீதா ஞானசேகரன், அமுதா சக்திவேல், தமிழ் செல்வி சோபன்பாபு,கோகுல்ராஜ், அமுதா பழனி, ஒன்றிய பிரதிநிதி முட்டை மணி, இளையராஜா, விக்கி, அக்பர், சங்கர் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

# ‘ரூபாய் 2000’ திரைப்படத்திற்கு தமிழக அரசின் திரைப்பட விருது

கிருஷ்ணகிரி, ஜன.31-

2021 ஆம் ஆண்டு வெளியான ‘ரூபாய் 2000’ திரைப்படத்திற்கு தமிழக அரசின் 2021ஆம் ஆண்டுக்கான திரைப்பட விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் அருகே குண்டலப்பட்டி கிராமத்தை சேர்ந்த இயக்குனர் ருத்ரன் இயக்கிய இந்த திரைப்படத்திற்கு சிறந்த படத்திற்கான சிறப்பு பரிசு வழங்கப்பட்டுள்ளது.




மேலும், இப்படத்தில் சிறப்பாக பின்னணி குரல் வழங்கிய அமீத் அவர்களுக்கு சிறந்த பின்னணி குரலுக்கான தமிழக அரசின் திரைப்பட விருது கிடைத்துள்ளது.

‘ரூ.2000’ என்பது 2021 ல் வெளியான ஒரு சமூக விழிப்புணர்வு மற்றும் சட்ட நாடகத் தமிழ் திரைப்படம் ஆகும். செல்லாத பண அறிவிப்பு (De-monetization) காலகட்டத்தில், ஒரு சாதாரண ஏழை விவசாயி சந்திக்கும் வாழ்க்கைச் சிக்கல்கள் மற்றும் போராட்டங்களை மையமாக கொண்டு இப்படம் உருவாக்கப்பட்டுள்ளது.

ஏடிஎமில் பெற்ற ரூபாய் 2000 நோட்டில் கிறுக்கல் இருப்பதால், மருத்துவ சிகிச்சை கிடைக்காமல் ஒரு குழந்தை உயிரிழக்கும் வேதனையான சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு, சமூகத்தில் நிலவும் பணப் புழக்கச் சிக்கல்கள், மனிதாபிமானத்தின் அவலம் ஆகியவற்றை வலுவாக எடுத்துரைக்கிறது.

சமூக அக்கறையுடன் உருவாக்கப்பட்ட இந்த திரைப்படத்திற்கு தமிழக அரசின் விருது கிடைத்தது, இயக்குனர் ருத்ரன் மற்றும் படக்குழுவினருக்கு மட்டுமல்லாது, கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளது.

# சிவகங்கையில் மாணவர்களுக்கான வனப் பாதுகாப்பு பயிற்சி நிறைவு விழா: சான்றிதழ்கள் வழங்கப்பட்டன

சிவகங்கை ஜன.31-

சிவகங்கை மாவட்டம் தமிழ்நாடு வனத்துறையின் சார்பில் பள்ளி மாணவர்களுக்காக நடத்தப்பட்ட "வனமும், வன உயிரினங்களின் பாதுகாப்பும் சவால்களும் தீர்வுகளும்" குறித்த பயிற்சி நிறைவு மற்றும் சான்றிதழ் வழங்கும் விழா சிவகங்கை மன்னர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.



முக்கிய விருந்தினர்கள் மற்றும் உரைகள் இந்த விழாவிற்கு சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தலைமை தாங்கினார்.

வவேற்புரை: சிவகங்கை வனக்கோட்ட உதவி வனப்பாதுகாவலர் மு.மலர்கண்டன் வரவேற்புரை ஆற்றினார். * திட்ட விளக்கவுரை: மாவட்ட வன அலுவலர் ரா.மகேந்திரன் திட்டத்தின் நோக்கம் குறித்து விளக்கமளித்தார். * கல்வித்துறை பங்களிப்பு: சிவகங்கை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் க.பாலதண்டாயுதபாணி முன்னிலை வகித்தார்.

சிறப்புரைகள் விழாவில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் விழா பேருரையாற்றினார். அதனைத் தொடர்ந்து, வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் சிறப்புரையாற்றி மாணவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கினார்.

வாழ்த்துரை வழங்கியவர்கள் இந்த நிகழ்ச்சியில் மக்கள் பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர்:

சிவகங்கை நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்தி ப.சிதம்பரம். மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் ஆ.தமிழரசி ரவிக்குமார். காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.மாங்குடி. சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர். செந்தில்நாதன். நிகழ்ச்சி விவரம் 30/01/2026 அன்று நடைபெற்ற இந்த விழாவானது தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கி, மாணவர்களிடையே வனப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அமைந்தது. பயிற்சியில் பங்கேற்ற ஏராளமான மாணவ, மாணவியருக்கு வனத்துறையின் சார்பில் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.



■ புதுக்கோட்டை மாவட்டம் புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கரம்பக்குடி தாலுகா வெள்ளாள விடுதி கிராமத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை முத்துராஜா MLA அவர்களால் நேரடி கொள்முதல் நிலையம் கட்டிடத்தை இன்றைய தினம்திறந்த வைத்து சிறப்பித்தார்களள் புதுக்கோட்டை அறங்காவல் குழு தலைவர் தவ பாஞ்சாலன் அவர்கள் ஊராட்சி ஒன்றிய தலைவரும் புதுக்கோட்டை மாவட்ட விவசாய சங்கத் தலைவரும் இந்த விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர் மற்றும் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்



■ கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி ஊராட்சி ஒன்றியம், குந்தாரப்பள்ளி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில், முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின் கீழ், மாணவ மாணவியர்களுக்கு காலை உணவு வழங்கும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் அவர்கள் இன்று (30.01.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் குமரேசன், சாவித்திரி, தலைமையாசிரியர் தமிழரசி ஆகியோர் உள்ளனர்.




# தமிழ்நாடு பொறியாளர்கள் கூட்டமைப்பு சார்பாக கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்

மதுரை ,ஜன.31-

மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு சார்பாக 6 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் தலைவர் வீரமணி தலைமையிலும், துணைத் தலைவர் சண்முகா , செயலாளர் தனசேகரன், பொருளாளர் பொன்ராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது, இந்த ஆர்ப்பாட்டத்தில் மத்திய அரசு பொறியாளர்களுக்கு இணையாக தமிழக அரசின் துறை, வாரியங்கள் மற்றும் போக்குவரத்து கழகங்களில் பணியாற்றும் பொறியாளர்களுக்கும் ஊதிய விகிதம் நிர்ணயிக்கப்படும் என்ற கடந்த தேர்தலில் அழிக்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும், பொறியாளர்களின் பணி நலன் மற்றும் பணி பாதுகாப்பு வழங்கிட வேண்டும், ஒருநபர் குழு பரிந்துரையின்படி முன்னாள் முதல்வர் கலைஞர் வழங்கிய ஆறாவது ஊதியக்குழு ஊதியத்தை வழங்க வேண்டும், பொறியாளர்களுக்கு ஏழாவது ஊதிய குழு வழங்கிட சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினை நடைமுறைப்படுத்த வேண்டும் , பொறியாளர்களுக்கு மட்டும் 2017 முதல் மறுக்கப்பட்டு வரும் ஏழாவது ஊதிய குழு ஊதிய பயன்களை உடனே நிறைவேற்றிட வேண்டும் போன்ற ஆறு அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டது, இந்நிகழ்வில் கூட்டமைப்பைச் சார்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.



பழனியில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில்

# தைப்பூசத் ஐந்தாம் நாள் திருவிழாவில் பக்தர்களுக்கு நகரக் கழகத்தின் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது

திண்டுக்கல், ஜன.31-

திண்டுக்கல் மாவட்டம் பழனி அறுபடை வீடுகளில் மூன்றாம் படைவீரான பழனியில் தைப்பூசத் திருவிழா பத்து நாட்கள் நடைபெறுகிறது அதைத் தொடர்ந்து கடந்த 26 ஆம் தேதி ஊர் கோயில் என்று அழைக்கப்படும் பெரியநாயகி அம்மன் கோயில் கொடியேற்றத்துடன் துவங்கியது அதனை தொடர்ந்து இன்று பழனி பைபாஸ் சாலையில் கழக மாநி எம்ஜிஆர் இளைஞர் அணி துணை செயலாளர் ரவி மனோகரன் தலைமையில் பக்தர்களுக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றம் நகர கழகத்தின் சார்பில் 1000 க்கும் மேற்பட்டோருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது இந்த நிகழ்ச்சியில் திண்டுக்கல்ல கிழக்கு மாவட்ட பொருளாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான வேணுகோபால் நகரச் செயலாளர் முருகானந்தம் ஒன்றிய கழக செயலாளகள் மாரியப்பன், முத்துசாமி மாவட்ட இளைஞரணி செயலாளர் அன்வர் தீன் மற்றும் கட்சி நிர்வாகிகள் ஏராளமான கலந்து கொண்டனர்.

# நான் தயார் என்னை சேர்ப்பதற்கு அவர்கள் ரெடியா என பெரியகுளம் பண்ணை வீட்டில் ஓபிஎஸ். பேட்டி

பெரியகுளம் ஜன.31-

தேனி மாவட்டம் பெரியகுளம் பண்ணை வீட்டில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் பேசிய ஓபிஎஸ் தர்மயுத்தம் நடத்த மனோஜ் பாண்டியன் மற்றும் வைத்தியலிங்கம் தான் காரணம் அவர்களே சென்று விட்டார்கள் தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைப்பதற்கு அவர்கள் தயாராக இருந்தால் தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைய நான் ரெடி என பெரியகுளம் பண்ணை வீட்டில் ஓபிஎஸ் பேட்டி தொலைக்காட்சி செய்தித்தாள்கள் you-tube சேனல்களில் குழப்பங்களை ஏற்படுத்தும் செய்திகளை பரப்ப வேண்டாம் என்றும் ஜனநாயக ரீதியாகவும் தொண்டர்களின் எண்ணங்களை அறிந்தும் தொண்டர்களின் சட்ட போராட்டங்கள் நடத்தி உரிமைகளை மீட்பதற்காக



தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகிறேன்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த பாராளுமன்ற பொதுத் தேர்தலின் போது தொண்டர்களும் மக்களும் நம் பக்கம் இருக்கிறார்களா என அறிவதற்கே சுயேட்சியாக பலாப்பழம் சின்னத்தில் போட்டியிட்டேன் 12 நாட்கள் மட்டுமே தேர்தல் பிரச்சாரம் செய்தேன் அந்தத் தேர்தலில் தமிழகத்திலிருந்து பல்வேறு பகுதிகளில் ஆறு பேர் ஓ பன்னீர்செல்வம் என்ற பெயரில் நிற்க வைத்து பெரும் சதியையும் குழப்பத்தையும் செய்தனர் சூழ்ச்சியை முறியடிக்கவே தொண்டர்களின் அடிப்படை உரிமைகளை மீட்பதற்கே இந்த இயக்கம் செயல் பட்டு வருகிறது தனி கட்சி துவங்கவில்லை போட்டியிடுவது பற்றி முடிவெடுக்கவில்லை பிரிந்து கிடைக்கக்கூடிய அதிமுகவின் இடையே அனைத்து சக்திகளையும் எம்ஜிஆர் ஜெயலலிதா உருவாக்கிய அனைத்து சக்திகளும் ஒன்று சேர வேண்டும் என சட்ட போராட்டம் நடத்தி வருகிறேன் இதில் தேவையில்லாமல் குழப்பங்களை ஏற்படுத்த வேண்டாம் மனதின் குரலாக நான் சார்ந்த மாவட்டமான தேனி மாவட்டத்தில் அதிமுகவினர் அறிந்து கொள்வதற்காகவே இந்த கூட்டம் கூட்டப்பட்டது இதே போல் தமிழகம் முழுவதும் மாவட்டசெயலாளர்கள் நிர்வாகிகள் பொதுக்குழு கூட்டம் நடத்தினர் அனைவரும் ஒன்றிணைக்க வேண்டும் என்ற கேள்விக்கு பிரிந்திருக்கிறோமோ ஒன்றாக இருக்கிறோமோ என்பதை கடம்பூர் ராஜூ புரிந்து கொள்ள வேண்டும் தேனி மாவட்ட நிர்வாகிகளிடம் மனதின் குரலாக அவர்கள் அனைவரும் எங்களது ஒருங்கிணைந்த குரலாகவே இருக்கின்றனர் மேலும் டிடிவி தினகரன் குறித்து கேட்டபோது டிடிவி தினகரன் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் தலைமையில் கூட்டணி வெற்றி பெற வேண்டும் என கூறினார் அதே போல் தான் நானும் அதே தான் என்னுடைய நிலைப்பாடு என்றார் பதவிக்கு வந்தவர் கட்சிக்கு விசுவாசமாக நடப்பதற்கு இது ஒரு நல்ல தருணம் எனக் கூறியிருக்கிறார் ஒன்றிணைக்க வேண்டும் ஒன்றிணைய வேண்டும் என்று தான் என்னுடைய கருத்து நான் தயார் என்னை சேர்ப்பதற்கு அவர்கள் ரெடியா இந்த கூட்டத்தில் திரளான மாவட்ட நிர்வாகிகளும் தொண்டர்களும் கலந்து கொண்டனர்.



கன்னியாகுமரி காந்தி மண்டபத்திலுள்ள அன்னாரது திருவுருவ படத்திற்கு, மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் .த.மனோ தங்கராஜ் , மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார்

கன்னியாகுமரி, ஜன.31-

கன்னியாகுமரி மாவட்டத்தில், அண்ணல் காந்தியடிகளின் 79வது நினைவு தினத்தையொட்டி கன்னியாகுமரி காந்தி நினைவு மண்டபத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவப்படத்திற்கு பால்வளத்துறை அமைச்சர்.த.மனோ தங்கராஜ். மலர் தூவி மரியாதை செலுத்தி, தெரிவிக்கையில்

கன்னியாகுமரி கடற்கரையில் அமைந்துள்ள காந்தி நினைவு மண்டபத்தில் ஆண்டுதோறும் ஜனவரி 30 அன்று அண்ணல் காந்தியடிகளின் நினைவு தினமானது மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் அனுசரிக்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் கன்னியாகுமரி காந்தி நினைவு மண்டபத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவப்படத்திற்கு, மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

அண்ணல் காந்தியடிகள் அவர்கள், இந்தியாவில் கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை மட்டுமல்லாது. உலக நாடுகளே போற்றுகின்ற வகையில் செயல்பட்டவர். இந்தியாவிற்கு சுதந்திரம் வாங்கி தந்த காந்திஜி அவர்களின் பெருமைகளையும், தியாகங்களையும், அன்னாரது அமைதி மார்க்கத்தையும். கொள்கைகளையும், அவரது வழிகாட்டுதலின்படி, நாம் அனைவரும் நம் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும். அவ்வாறு செய்வது, அண்ணல் காந்தியடிகள் அவர்களுக்கு மிகவும் பெருமை சேர்ப்பதாகும். இவ்வாறு பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ். தெரிவித்தார்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் .ரெ.மகேஷ், தமிழ்நாடு மாநில மீனவர் நல வாரிய தலைவர் .ஜோசப் ஸ்டாலின், நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் .எஸ்.காளீஸ்வரி, உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) .எஸ்.செல்வலெட் சுஷ்மா, கன்னியாகுமரி நகர்மன்ற தலைவர் குமரி ஸ்டீபன், கன்னியாகுமரி நகராட்சி ஆணையர் .கண்மணி, அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் .கந்தசாமி, சுற்றுலா பயணிகள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





## கிளெனீகல்ஸ் மருத்துவமனை மற்றும் ரோட்டரி கிளப் திருச்சி சோழாவுடன் இணைந்து

# திருச்சியில் இலவச மருத்துவ முகாமை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி துவக்கி வைத்தார்

திருச்சி ஜன.31-

திருச்சி, போர்டிஸ் ஹெல்த்கேர் நெட்வொர்க்கின் அங்கமான சென்னை கிளெனீகல்ஸ் மருத்துவமனை, ரோட்டரி கிளப் திருச்சி சோழாவுடன் இணைந்து திருச்சியில் இலவச மருத்துவ முகாமை நடத்தியது. இந்த முகாமில் கல்லீரல், நுரையீரல், இதயம் மற்றும் எலும்பு மஜ்ஜை தொடர்பான நோய்களுக்கு சிறப்பு மருத்துவர்களின் ஆலோசனைகள் வழங்கப்பட்டது. மேலும் மருத்துவ பரிசோதனைகளும் செய்யப்பட்டது. இதில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு ஆர்வமுடன் மருத்துவ பரிசோதனைகளை செய்து கொண்டனர்.

இந்த மருத்துவ முகாமை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி துவக்கி வைத்தார். இதில் சென்னை கிளெனீகல்ஸ் மருத்துவமனையின் மூத்த மருத்துவர்களான கல்லீரல் துறை இயக்குனர் டாக்டர் ஜாய் வர்கீஸ், இதய மற்றும் நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சை இயக்குனர் டாக்டர் கோவினி பாலசுப்ரமணி, புற்றுநோய் மற்றும் எலும்பு மஜ்ஜை சிகிச்சை நிபுணர் டாக்டர் பொன்னி சிவப்பிரகாசம், நுரையீரல் மாற்று சிகிச்சை நிபுணர் டாக்டர் சிந்துரா, கல்லீரல் மாற்று சிகிச்சை நிபுணர் டாக்டர் கதிரேசன் மற்றும் ரோட்டரி சங்க நிர்வாகிகள் சந்திரசேகரன், கோகுலகிருஷ்ணன் உள்ளிட்ட ஏராளமான பேர் கலந்து கொண்டனர்.







■ மதுரையில் 37 வது சாலை பாதுகாப்பு மாதத்தை முன்னிட்டு மாநகர போக்குவரத்து காவல் துறை. மற்றும் தமிழ்நாடு போக்குவரத்து துறை இணைந்து நான்கு சக்கர வாகனத்தினில் சீட் பெல்ட் அணிவதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு வழங்கி..மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் முதல் காந்தி மியூசியம் வரை சீட் பெல்ட் வாகனப்பேரணி நடைபெற்றது..



# மலையாண்ட அள்ளி ஊராட்சியில் புதிய போர்வெல்-பைப் லைன் அமைக்கும் பணிக்கு பூமி பூஜை

காவேரிப்பட்டணம், ஜன.31-

கிஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் ஒன்றியம் மலையாண்ட அள்ளி ஊராட்சிக்குட்பட்ட புதூர், பட்டன் நகர், விநாயகபுரம் கிராமங்களில் குடிநீர் வசதி மேம்படுத்தும் நோக்கில், கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 11.20 லட்சம் மதிப்பீட்டில் புதிய போர்வெல் மற்றும் பைப் லைன் அமைக்கும் பணிக்கு பூமி பூஜை நடைபெற்றது.

இப்பணியை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினருமான கே.அசோக்குமார் கலந்து கொண்டு பூமி பூஜை செய்து பணிகளைத் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சிக்கு ஒன்றிய செயலாளர் பையூர் பெ. ரவி, இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை மாவட்ட செயலாளர் கே.பி.எம். சதீஷ்குமார், நகர செயலாளர் விமல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் இலக்கிய அணி ஒன்றிய செயலாளர் சரசு கோவிந்தசாமி வரவேற்று பேசினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட விவசாய அணி செயலாளர் மோகன், மாவட்ட வழக்கறிஞர் பிரிவு செயலாளர் ஜெயக்குமார், மாவட்ட மாணவரணி செயலாளர் ராகுல்,

ஒன்றிய அம்மா பேரவை செயலாளர் கேசவன், ஒன்றிய துணை செயலாளர் விக்ரம்குமார், எம்ஜிஆர் இளைஞர் அணி ஒன்றிய செயலாளர் கணேசன், முன்னாள் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் திருப்பதி,ராஜா, கண்ணன், ராமசுந்தரம், முனியப்பன், சரவணன் ஆகிய அதிமுக கட்சி நிர்வாகிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



# கிராமப்புற மக்களுக்காக நவீன நடமாடும் கண் மருத்துவ சேவை - மதுரையில் தொடக்கம்

மதுரை, ஜன.31-

தென் தமிழகத்தின் கிராமப்புற மக்களுக்கு தரமான கண் சிகிச்சை சேவையை எளிதாக கொண்டு சேர்க்கும் நோக்கில், மதுரையைச் சேர்ந்த ஆதி கண் மருத்துவமனை, அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய நடமாடும் கண் மருத்துவ கிளினிக் சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது. இச்சேவையை தமிழ்நாடு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி தொடங்கி வைத்தார்.

இந்த நடமாடும் மருத்துவ வாகனத்தில் கணினி வழி கண் பரிசோதனை, கண்புரை, குளுக்கோமா, கிட்டப்பார்வை மற்றும் நீரிழிவு நோயால் ஏற்படும் கண் பாதிப்புகளை கண்டறியும் வசதிகள் உள்ளன. அனுபவம் மிக்க மருத்துவக் குழுவினர் மூலம் கண் ஆலோசனை, மருந்துகள் மற்றும் தரமான கண் கண்ணாடிகள் உடனடியாக வழங்கப்படுகின்றன.

ஆதி கண் மருத்துவமனையின் 7வது ஆண்டு விழாவை முன்னிட்டு, பொருளாதார வசதி குறைந்த மக்களுக்காக இலவச கண் பரிசோதனை முகாமும், குறைந்த கட்டணத்தில் கண்புரை அறுவை சிகிச்சையும் வழங்கப்படுகிறது. நகரங்களுக்கு செல்ல முடியாத கிராமப்புற மக்களுக்கு தங்களின் இருப்பிடத்திலேயே உயர்தர கண் சிகிச்சை கிடைப்பதால் இந்த சேவை பெரிதும் பயனளிக்கும் என தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வில் மதுரை மருத்துவக் கல்லூரி டீன் டாக்டர் எல். அருள் சுந்தரேஷ் குமார், நாடார் மகாஜன சங்க பொதுச் செயலாளர் கரிக்கோல்ராஜ் நாடார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் பேசிய அமைச்சர்

பி. மூர்த்தி, கிராமப்புற மக்களின் நலனுக்காக தொடங்கப்பட்ட இந்த சேவை பாராட்டுக்குரியது என தெரிவித்தார்.





# கன்னியாகுமரியில் போக்குவரத்து போலீசார் இருசக்கர வாகனத்தில் விழிப்புணர்வு பேரணி

கன்னியாகுமரி, ஜன.31-

கன்னியாகுமரி மாவட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஞிஸி.ஸி ஸ்டாலின் . விபத்துகளை குறைக்கும் முன்னெடுப்பாக பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். அதன் தொடர்ச்சியாக கன்னியாகுமரி போக்குவரத்து போலீசார் இருசக்கர வாகனத்தில் Helmet அணிந்தபடி 100 இருசக்கர வாகனங்கள் பங்கு பெற்ற "No Helmet No Entry" என்ற விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. இந்த விழிப்புணர்வு பேரணியை காவல்துணை கண்காணிப்பாளர் . ராஜா தலைமை ஏற்று துவக்கி வைத்தார். மேலும் கன்னியாகுமரி போக்குவரத்து ஆய்வாளர் செல்லதுரை. பேரணியில் சிறப்புரை வழங்கினார். இந்த விழிப்புணர்வு பேரணியானது கன்னியாகுமரி ரவுண்டானாவில் இருந்து துவங்கி விவேகானந்தபுரம், பழத்தோட்டம்,மகாதானபுரம் வழியாக ஜீரோ பாயிண்ட் இல் நிறைவடைந்தது. இந்தப் பேரணியில் காவல்துறையினரும் கல்லூரி மாணவர்களும் கலந்து கொண்டனர்.

# சுப்புலாபுரம் கிராமத்தில், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் சார்பில் விவசாயிகளுக்கான வேளாண் விழிப்புணர்வு மற்றும் செயல்விளக்கப் பயிற்சி

தேனி, ஜன.31-

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி வட்டாரத்திற்குட்பட்ட சுப்புலாபுரம் கிராமத்தில், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் சார்பில் விவசாயிகளுக்கான வேளாண் விழிப்புணர்வு மற்றும் செயல்விளக்கப் பயிற்சி நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த பயிற்சி நிகழ்ச்சி, கிராம சேவகர் மற்றும் வேளாண் துறையின் ஒத்துழைப்புடன் ஏற்பாடு செய்யப்பட்டது. விவசாயிகளின் பயிர் உற்பத்தித் திறனை மேம்படுத்தும் நோக்கில் இந்நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இந்த செயல்விளக்கப் பயிற்சியை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தைச் சார்ந்த மாணவி செல்வி திவ்யா ராஷ்னி நடத்தினார். இப்பயிற்சியில், விவசாயத்தில் நவீன மற்றும் எளிய முறைகளை பயன்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது.

பயிற்சியின் போது, விதைப்பிற்கு முன் மேற்கொள்ள வேண்டிய அடிப்படை நடவடிக்கைகள் மற்றும் பயிர்களின் ஆரம்ப வளர்ச்சியை மேம்படுத்தும் முறைகள் குறித்து எளிமையாக



எடுத்துரைக்கப்பட்டது. இவ்வகை முறைகள் மூலம் விதைகளின் முளைதிறன் மேம்பட்டு, செடிகள் ஆரோக்கியமாக வளர உதவும் என விளக்கப்பட்டது.

மேலும், இந்த நடைமுறைகள் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை குறைக்கவும், பயிர்களின் தாங்குத்திறனை அதிகரிக்கவும் உதவும் என்றும் கூறப்பட்டது. விவசாயிகள் குறைந்த செலவில் நல்ல விளைச்சல் பெற இம்முறைகள் பயனுள்ளதாக இருக்கும் எனவும் எடுத்துரைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் ஆர்வமுடன் பங்கேற்று, தங்களின் அனுபவங்களை பகிர்ந்து கொண்டு சந்தேகங்களுக்கு விளக்கம் பெற்றனர். இந்த பயிற்சி நிகழ்ச்சி விவசாயிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது.

மொத்தத்தில், சுப்புலாபுரம் கிராமத்தில் நடைபெற்ற இந்த செயல்விளக்கப் பயிற்சி, விவசாயிகளுக்கு பயனளிக்கும் வகையில் அமைந்ததுடன், வேளாண் அறிவை மேம்படுத்தும் ஒரு சிறந்த முயற்சியாக கருதப்பட்டது.



■ புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் தாலுகா மேலூர் கிராமத்தில் அருள் பாலித்து கொண்டு இருக்கிற அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் தோரண அலங்காரம் வளைவு மகா கும்பாபிஷேகம் இன்று 10 மணியளவில் நடைபெற்றது உபயதாரர் பி ஆர் எம் பழனியப்பன் குடும்பத்தார்கள் பொதுமக்கள் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161